1981 செப்டம்பர் 1]

## தாயனூர் பள்ளத்தில் பாலம் கட்டும் திட்டம்

*வினா எண் 151—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மேட்டுப்பாளையம், காரமடை-பில்லூர் டேம் செல்லும் ரோட்டில் குறுக்கே தாயனூர் பள்ளத்தில் பாலம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 9.71 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணியினை எடுத்து செய்யப்பட உள்ளது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட தொகை புதிய மதிப்பீட்டிலே ஒதுக்கப்படவில்லை பழைய மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டுள்ளதாக சொன்னார்கள். ஏறி வருகிற விலைவாசியைக் கருதி புதிய மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தப் பால வேலை முடிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய மதிப்பீட்டின்படி எவ்வளவு செலவானாலும் இந்தப் பணி முடிக்கப்படும்.

## உப்பாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

*வினா எண் 152—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை காளியாபுரத்தில் உள்ள உப்பாற்றில் பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 12 இலட்சம்.

(இ) அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. பணி விரைவில் துவங்கப்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பாற்றில் பாலம் கட்டுவது சம்பந்தமாக திட்டமிட்டு, வேலை நடப்பதாக சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஆண்டு இந்த வேலை துவங்கப்படும். எத்தனை ஆண்டுகளில் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே துவங்கப்படும்; இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும்.

## சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பர பேனர்கள் வைத்துக்கொள்வதற்கான அனுமதி

*குறுகிய கால வினா எண் 3—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை நகரில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பர பேனர் வைத்துக்கொள்ள எந்த முறையில் எத்தனை ஆண்டுகளுக்கு விடப்பட்டுள்ளது?

(ஆ) இதன் மூலம் மாநகராட்சிக்கு ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரம் செய்வதற்கான உரிமை குத்தகை மற்றும் கான்ட்ராக்ட் (ஏலம்) முறையில் அளிக்கப்படுகிறது. இவ்வகையில் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு வரை அளிக்கப்படுகிறது.

(ஆ) ரூபாய் 2,84,840.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பம்பாய் விமான நிலையத்திலிருந்து, நகருக்குச் செல்லும் பாதை முழுவதும் நிறைய விளம்பரங்கள்